மலர் : 21
இதழ் : 08

# அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

குழித்துறை மறைமாவட்டம்

ஆகஸ்ட் 2026

தனிச்சுற்றுக்கு மட்டும்



# மறைவட்ட பொதுக்குழு கூட்டம்



மாத்திரவிளை



முளகுமூடு



காரங்காடு



புத்தன்கடை



வேங்கோடு

# உள்ளே...


★ **இயக்குநரிடமிருந்து...**

★ **நட்பின் முகவரி...**

வேதியர். **மா. பேபி கமலா**

★ **மண்ணக வாழ்வின் பரிசு விண்ணக வாழ்வு...**

அருள்முனைவர். **ஒய்சிலின் சேவியர்**

★ **வாழ்வின் மறுபக்கம்...**

செல்வி. **அ.ரா. லாவண்ணியா**

★ **விளம்பர அரசியல் விளையாட்டு – ஏமாறும் நவீன ஆதாம் ஏவாள்கள் நாம்...**

அருள்பணி. **எட்வின் ராஜ் சி.**

★ **சிரமங்கள் சாதனையின் ஆசிரியர்கள்**

★ **உறவுக்கு ஏங்கும் மனம்**

ஆசிரியர். **சேவியர்**

★ **அறிவிப்பு (கருத்தரங்கு கட்டுரை)**

★ **நாட்டின் கண்கள் குழந்தைகள்**

திருமதி. **ஜோஸ்பின் விப்சி**

★ **பாட்டி வைத்தியம்**

திரு. **ஜஸ்டின்**

★ **கத்தோலிக்கர், கத்தோலிக்கர் அல்லாத ஒருவரை திருமணம் செய்து கொள்ளலாமா?**

அருள்முனைவர். **ஆரோக்கிய ஜோஸ்** DCL

★ **நில உரிமையை உறுதி செய்யும் துணை ஆவணங்கள்**

அருள்முனைவர். **ஆரோக்கிய ஷெல்லி றோஸ்** DCL

★ **அறிவிப்பு** (Eco Family Challenges)

★ **நலத்திட்டங்கள்**

★ **ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்**



## ஆசிரியர் குழு

அருள்பணி. M. **ஆல்வின் விஜய்**

வேதியர். M. பேபி கமலா

திரு. S. ஜாண் பெல்லார்மின்

திருமதி. T. ஷீலா

திருமதி. K. ரெத்தினபாய்

# இயக்குநரிடமிருந்து...

*அன்பிற்கினிய அன்பிய உறவுகளே!*



ஆகஸ்டு மாதம் நம் நாட்டிற்கும், திருஅவைக்கும், மனித சமுதாயத்திற்கும் அர்த்தமிக்க நினைவுகளைத் தாங்கி வரும் மாதமாகும். சுதந்திர தினம் நமக்கு அடிமைத் தளையிலிருந்து விடுதலையை நினைவூட்டுகிறது. ஆனால் உண்மையான சுதந்திரம் வெளிப்புற அடிமைத்தனத்திலிருந்து மட்டுமல்ல; பொறாமை, பகைமை, பிளவு, பழிவாங்கும் மனப்பான்மை போன்ற உள்ளார்ந்த கட்டுகளிலிருந்தும் விடுதலை பெறுவதில்தான் இருக்கிறது.

அன்னை மரியாளின் விண்ணேற்பு திருவிழா, இறைவனுக்கு முழுமையாக ஒப்புக்கொடுத்த வாழ்க்கை ஒருபோதும் வீணாகாது என்பதை நமக்குக் கற்றுத்தருகிறது. இறைவனின் திட்டத்திற்கு தன்னை ஒரு ஏணியாக மாற்றிக்கொடுத்த அன்னை மரியாள், இன்று மகிமையில் உயர்த்தப்பட்டுள்ளார். நாமும் நம் குடும்பங்களிலும் அன்பியங்களிலும் மற்றவர்களை உயர்த்தும் ஏணியாக வாழ அழைக்கப்படுகிறோம்.

உலக நண்பர்கள் தினம், உண்மையான நட்பு என்பது வெறும் அறிமுகமல்ல; அன்பு, நம்பிக்கை, மன்னிப்பு, தியாகம் ஆகியவற்றின் உறவு என்பதை நினைவூட்டுகிறது. ஒவ்வொரு அன்பியமும் நட்பின் முகவரியாக மாற வேண்டும். கருத்து வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமல், உறவுகளைப் பெரிதாக மதிக்கும் மனப்பான்மை நம்மிடையே வளர வேண்டும்.

உலக மனிதநேய தினம், மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பை நம்மிடம் எதிர்பார்க்கிறது. பிறரது துயரத்தை உணர்ந்து, உதவிக்கரம் நீட்டி, ஒவ்வொருவரையும் இறைவனின் சாயலாகக் காணும் மனநிலையே உண்மையான மனிதநேயம். இதுவே நற்செய்தியின் இதயமும் ஆகும்.

எனவே, இந்த ஆகஸ்டு மாதத்தில் நம் குடும்பங்களில் காணப்படும் சின்னஞ்சிறிய மனக்கசப்புகள், உறவுச் சிக்கல்கள் மற்றும் பிரிவினைகளை அகற்றுவோம். மன்னிப்போம், இணைவோம், ஒன்றுபடுவோம். அன்பியங்கள் வெறும் ஜெபக் குழுக்களாக அல்லாமல், ஒற்றுமை மலரும் குடும்பங்களாகவும், அன்பு பகிரப்படும் சிறிய திருஅவைகளாகவும் விளங்கட்டும்.

"கடவுள் அன்பாய் இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவர் கடவுளோடு இணைந்து இருக்கிறார். கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார்". (1 யோவான் 4:16). இந்த இறைவார்த்தையை வாழ்வாக்கி, அன்பிலும் ஒற்றுமையிலும் மனிதநேயத்திலும் வளரும் அன்பியக் குடும்பங்களாக நாம் அனைவரும் முன்னேறுவோம்.

**பணி தோழமையில்**

**அருட்பணி. M. ஆல்வின் விஜய்**
**இயக்குநர், அன்பியப் பணிக்குழு.**

1-ம் வாரம்

# நட்பின் முகவரி

வேதியர். மா. பேபி கமலா



வாழ்க்கையில் மனிதன் இருவகையினரைத் தேர்வு செய்வான் அவை: 1. துணையைத் தேர்வு செய்வது, 2. நண்பனைத் தேர்வு செய்வது. இதில் துணையை நாம் தேர்வுசெய்தாலும் அது, கடவுள் முன்குறித்ததாகவே அமைந்துவிடும். ஆனால், நண்பர் என்பவர் ஒவ்வொரு மனிதனின் சுயச்சிந்தனைத் தெளிவோடும், உரிமையோடும் தேர்வுசெய்வதாகும். நட்பின் முகவரியாகிய நண்பர்களில், இரண்டு வகையினர் காணப்படுகின்றனர். அவை: 1. நல்ல நண்பர் 2. தீய நண்பர். இதையே விவிலியத்தில், "**கேடு வருவிக்கும் நண்பர்களுமுண்டு; உடன்பிறந்தாரைவிட மேலாக உள்ளன்பு காட்டும் தோழரும் உண்டு**" என நீ.மொ 18:24-ல் குறிப்பிடப் பட்டுள்ளது.



இதில், பணம், படிப்பு, பருவம், பாசம், பாலினம், குலம், குழுமம் எனப் பார்த்துப் பார்த்துத் தேர்வுசெய்வதல்ல நண்பர்கள் கூட்டம். அந்தந்த இருபால் மனிதர்களின் உள்ளத்து எண்ணங்களுக்கேற்பதான் இவ்வகை நண்பர்கள் அமைகின்றனர். நல்ல எண்ணம் கொண்டோருக்கு நல்ல நண்பரும், தீய, கறைப்படிந்த, இறைப் பற்றில்லாதோருக்கு தீய நண்பரும் தானாக அமைவர்.

## நல்ல நண்பர்

"**நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது எளிது. ஆனால், உயிரைக் கொடுக்கும் நண்பன் கிடைப்பது அரிது**"- நெப்போலியன்.

- நல்வழியைக் காட்டுவார்; நன்மையானதையேச் சிந்திப்பார்; நண்பர்மீது நம்பிக்கை வைத்து இரகசியங்களைப் பாதுகாப்பார்.
- நண்பனோடு அக்களிப்பில் கைத்தட்டி மகிழ்வதோடு நின்றுவிடாமல், துயரங்களில் துவளும்போது, நண்பனின் தோள்த்தட்டிக் கொடுப்பவராக இருப்பார்.
- துன்பப்படும்போது அருகில் இருப்பார்; தனித்துவிடும்போது ஆறுதலாய் இருப்பார்; தாங்குவார்.
- தாழ்வு மனநிலையில் இருக்கும் நண்பரைத் திடப்படுத்துவார்.
- அவருள் இருக்கும் திறமைகளைக் கண்ணாடியாகக் காட்டுவார்;

நண்பர் நேர்நிலைக்கு வந்தபின்னும், மீண்டும் வீழ்ந்துவிடாமல் கண்காணிப்பார்.

- உலகில், தன்னை மறைத்து நண்பனை அடையாளப்படுத்துவார்.
- அன்பு காட்டுவதில் அளவில்லாமலிருப்பார்; தவறுகளைச் சுட்டிக் காட்டுவதில் எல்கையாக நிற்பார். இதையே விவிலியத்தில், "**நண்பர் கொடுக்கும் அடிகள் நல்நோக்கம் கொண்டவை**" என நீ.மொ 27:6 –ல் காண்கிறோம்.
- நண்பன் தலைநிமிர்ந்து நிற்பதற்காக, தலைகுனிந்து நல்ல நூற்களைக் கற்றிட வழிகாட்டுவான் சமூகம், தன் நண்பனை அண்ணார்ந்துப் பார்க்கச் செய்வார்.

## தீய நண்பர்

"**தீய எண்ணம் கொண்ட நண்பர்களுடன் இருப்பதைவிட, தனிமையாய் இருப்பதே நல்லது**" – நபிகள் நாயகம்

- ஒரு கப் நல்ல தண்ணீரில் ஒரு துளி விஷம் விழுந்தால் நல்ல தண்ணீரும் விஷமாக மாறுவதுபோல், தீய நண்பர்களின் வார்த்தைகள் மற்றும் வாழ்க்கை முறைகளும் அவ்வாறாகிவிடுகிறது.
- என் பிள்ளையை அந்த பிரண்ட் பையன்தான் கெடுத்தான் அதுவரை அவன் நல்லாத்தான் இருந்தான் என்பது எல்லாப் பெற்றோரின் அறியாத்தன்மை. ஒருவர் நல்லதை விதைத்தால் நன்மை வந்துசேரும்; தீமையை விதைத்தால் தீமையே வந்துசேரும் என்ற வரியினைப் புரிந்து, ஏற்றுக்கொள்ள வேண்டும். இதையே சாணக்கியர், "**ஒருவருடைய நடத்தைதான் நண்பர்களையோ, விரோதிகளையோ உருவாக்குகிறது**" என்றுக் கூறுகிறார்.
- தன் நண்பர்களை ஒழுக்கம் தவறச்செய்து, பகட்டான வார்த்தைகளைப் பேசச்செய்து, போதைகளுக்கு அடிமையாக்கி, உடலைச் சிதைத்து வாழ்க்கையை சீர்குலைத்து தானும் அதிலே இன்பம் காணுகிறார்.
- இரகசியம் என்பதே அவர் உள்ளத்தில் தங்காது; ஆபத்தில் தன் நண்பரின் காலை வாரிவிட்டு நகைப்பார்.

இவ்வாறு, நட்பின் இருவகை முகவரிகளை வாசித்தறிந்தோம். இதில், எந்த முகவரியில் நாம் பயணிக்கப்போகிறோம். நல்ல நண்பன் நம் வாழ்வின் கண்காணிப்புக் கேமிரா. நல்ல நட்பு முகவரியின் வழித்தடங்களாவன: அன்பு, அரவணைப்பு, ஆற்றுப்படுத்துதல், ஆளுமைப்படுத்துதல், ஆற்றல்படுத்துதல். இந்த வழித்தடங்களில் செல்ல "**நட்பைப் பெறுவதில் நிதானமாய் இரு**" என்று சாக்ரட்டிஸ் கூறுகிறார். நல்ல நண்பர்கள் கிடைக்க, நாம் நல்ல நட்பின் முகவரியில் பயணிப்போம்...

2-ம் வாரம்

# மண்ணக வாழ்வின் பரிசு விண்ணக வாழ்வு

அருள்முனைவர். **ஒய்சிலின் சேவியர்**



அன்னை மரியாவின் விண்ணேற்பு அவர்தம் விண்ணக மண்ணக வாழ்வின் நேர்மையான, நேர்த்தியான வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும், கலங்கரை விளக்காகவும் காணப்படுகிறது என்றால்



அது மிகையாகாது. மண்ணக வாழ்வின் மகத்தான வாழ்விற்குக் கிடைக்கும் இன்ப பரிசு தான் விண்ணகம். மண்ணக வாழ்வை நிறைவு செய்த மரியாவைக் கடவுள் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு அழைத்துச் சென்றார் என்பதை கொண்டாடும் அர்த்தமுள்ள விழா தான் விண்ணேற்பு விழா. மண்ணக வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைந்தால் விண்ணகத்தில் நிலையான வீடு உண்டு என்பதை உரக்கச் சொல்லும் உயரிய விழாதான் அன்னை மரியாவின் விண்ணேற்பு விழா. மண்ணுலக வாழ்வில் கடவுள் நம்மிடம் ஒப்படைக்கும் ஒப்புயர்வற்றப் பணிகளை எவ்வித ஒப்பந்தமுமில்லாமல் நிறைவு செய்யும்போது கடவுள் தருகின்ற அருமையான பரிசு தான் விண்ணக வாழ்வு என்பதை இவ்விழா நமக்கு எடுத்துக்காட்டுவதோடு மரியாவை இறைவன் முன்னுதாரணமாக முன்வைக்கிறார். தாயின் கருவிலேயே முன்குறித்து வைத்த கடவுள் மரியாவை மீட்பின் திட்ட கருவியாகத் தேர்வு செய்து தெரிந்தெடுக்கிறார் கடவுள். அந்த மீட்புத் திட்டத்தை நிறைவேற்றும் அன்னையாய் மட்டுமல்ல விடுதலையின் வீரமங்கையாய் தன்னை வெளிப்படுத்துகிறார் மரியா. கருவில் மகனை தாங்கியது முதல் கல்வாரியில் தன்மகன் சிலுவையில் தொங்கியது வரை சிலுவையின் அடிவாரத்தில் சென்று அரவணைக்கும் அன்பு தாயாய்த் திகழ்கிறார் அன்னை மரியா! விடுதலை வாழ்வைக் கனவு கண்ட மக்களின் வாழ்வில் விடுதலையின் விடிவெள்ளியாய்த் தன் மகனோடு போர்தொடுக்கும் போராளியாய் நின்று செயல்பட்ட அன்னைக்குக் கடவுள் விண்ணகத்தை பரிசாக வழங்கிய விழாவே விண்ணேற்பு விழா. இந்திய நாடு சுதந்திரம் பெற்ற இந்நாளிலே விண்ணேற்பு விழாவையும் கொண்டாடுவதில், அர்த்தமுள்ள ஆழமும் பொதிந்துக் கிடக்கின்றன. உலக மக்களின் சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார, பண்பாட்டு விடுதலைக்காய் உழைத்தவர் மட்டுமல்ல அன்னை மரியா. மாறாக, விடுதலை நாயகன் இயேசுவை இவ்வுலகத்திற்குத்

தியாகம் செய்தவர், அர்ப்பணித்தவர் அவர். எனவேதான் இந்நாளை உலகத் திருஅவை அன்னை மரியாவின் விண்ணேற்பு விழாவாகக் கொண்டாடி மகிழ்கின்றது. நாமும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவு செய்தால் விண்ணக வீடு பரிசாக கிடைக்கும் என்பதே விண்ணேற்பு விழா நமக்குச் சொல்லும் பாடமாகும்.

**சிந்தனைக்கு**

1. மண்ணக வாழ்வின் பரிசுதான் விண்ணக வாழ்வு என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதா?
2. அன்னை மரியா மீட்பு திட்டத்தின் கருவி என்று ஏற்றுக்கொள்ள முடிகிறதா?
3. அன்னை மரியா விடுதலையின் விடிவெள்ளி எவ்வாறு?

3-ம் வாரம்

# வாழ்வின் மறுபக்கம்

செல்வி. **அ.ரா.லாவண்ணியா**



இந்நவீன உலகில் மனிதர்களாகிய நாம், அவசர அவசரமாய் ஒரு ஒற்றையடிப் பாதையில் ஓடிக்கொண்டிருக்கிறோம். நாம் செல்லும் பாதையிலும், பாதையோரங்களிலும் இருப்பதை கவனிக்க மட்டும் அல்ல; சற்றே நமது பார்வையை அதில் பதிக்க கூட நேரமில்லை என நமக்கு நாமே எண்ணிக்கொள்கிறோம். செல்வம் சேர்ப்பதை நாம் செல்லும் பாதையின் இலக்காய்க் குறித்துக் கொள்கிறோம். இந்த ஓட்டத்தில் நம்மால் சேர்க்கப்படும் செல்வம் நமக்கும், நம்மைச் சார்ந்த நமது குடும்ப உறுப்பினர்களுக்கும் மட்டுமே என்பதை மனதில் பதிய வைத்துக் கொள்கிறோம். இதனால் அந்த ஒற்றையடி பாதையை தாண்டி எதைப்பற்றியும் சிந்திக்காதவர்களாய் நாம் மாறிவிட்டோம். இந்நவீன யுகத்தில் மனிதன் சுயநல வட்டத்திற்குள் சுருங்கி விட்டான் என பொதுவாக சொல்வதுண்டு. ஆனால் இந்நொடியின் உண்மை நிலவரம் என்னவெனில், வயதான தன் தாய், தந்தையை தன் குடும்பம் என எண்ண முடியாத அளவுக்கு, அந்த சுயநல வட்டத்தை விட மிகச்சிறியதாய் மனித மனம் சுருங்கி போய்விட்டது. இப்படி சுருங்கி போன மனித மனதிற்கு என்ன பெயரிடுவதென்றே தெரியவில்லை.



பள்ளிப்படிப்பு, பின் கல்லூரி படிப்பு, அதன்பின் வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தைப் பேறு என வாழ்வின் ஒரு பக்கத்தை கருத்தில் கொண்டு, இந்த வட்டத்திலேயே சுழன்று கொண்டிருப்பதால், அன்பு, கருணை, இரக்கம், அமைதி, மகிழ்ச்சி போன்ற வாழ்வின் மறுபக்கத்தை மறந்தே விட்டோம். உண்மை என்னவெனில் இந்த மறுபக்க மதிப்பீடுகளின்றி மனிதன் ஒருபோதும் முழுமையடைவதில்லை. இருபக்கங்களும் இல்லா நாணயம் செல்லா காசாய், பயனற்றதாய் இருப்பது போலவே மறுபக்கத்தை மறந்த மனித வாழ்வும் இருக்கும்.

உடல் வலுவிருக்கும் வரை, செல்வமே மகிழ்வின் அச்சாணி என ஓடுகிறோம். வலுவிழந்த பின் துணை தேடுகிறோம். அந்நொடிதான் ஒற்றையடி பாதையில் வேகமாய் ஓடியதால், எதை தொலைத்தோம் என்பது நம் அறிவுக்கு எட்டுகிறது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல, வெறுமை நம்மை வாட்டுகிறது.

மனித வாழ்வு அன்பால் ஆளப்பட வேண்டியது; அரவணைப்பால் அழகாக்கப்பட வேண்டியது; இரக்கத்தால் இயங்க வேண்டியது; கருணையால் கட்டியெழுப்பப்பட வேண்டியது; அமைதியால் நிறைவடைய வேண்டியது. ஆனால், நாம் பயணிக்கும் ஒற்றையடிப்பாதை நமது வாழ்வை இவ்வாறு அர்த்தமுற கட்டமைப்பதில்லை. அது உடன் வாழ்பவர்களின் உள்ளங்களை புரிந்து கொள்ளவோ, அவர்களின் கண்ணீரைத் துடைக்கவோ, காயங்களுக்கு கட்டு போடவோ, ஏன் அவர்களை சற்று திரும்பிப் பார்க்கவோ கூட நமக்கு கற்பிப்பதில்லை.

இறைமகன் இயேசு, தன் வாழ்வை அர்த்தமுற கட்டமைத்தார். அவர் ஒற்றையடி பாதையை அல்ல; நீண்ட, நெடிய, அகன்ற பாதையை தேர்ந்து கொண்டார். அப்பாதையில் அவர், அவசர அவசரமாய் ஓடவில்லை, மாறாக, பொறுமையாக நடந்தார். சுற்றி நடப்பவற்றில் தனது பார்வையையும், கவனத்தையும் பதித்தார். தேவையில் இருந்தோரைச் தேடிச் சென்றார். அல்லல் படுவோரை அரவணைத்தார். துயரத்தில் இருந்தோரை தூக்கிவிட்டார். பிறர் வாழ தன்னையே தந்தார். அதன் மூலம், வாழ்வின் மறுபக்கத்தை உணர்ந்து, தன் புவி வாழ்வை அழகுற, அர்த்தமுற கட்டமைத்தார். அவ்வாறு, அர்த்தமுற வாழ்ந்ததால் சிலுவை மரணம் பரிசானது. ஆனால், அந்த சிலுவை மரணத்தின் மறுபக்கமாய் உயிர்ப்பின் மகிமை திகழ்ந்தது.

வாழ்வு என்பது வெற்றி பெறுவதற்கான பயணம் மட்டுமல்ல; நல்ல மனிதனாக மாறுவதற்கான பயணமும் கூட. இந்த உலகம் வெளித்தோற்றத்தை கொண்டு மதிப்பிடுகிறது. ஆனால் வெளித்தோற்றம் என்னும் திரைக்குப் பின்னாலிருக்கும் துயரம், தனிமை, மன அழுத்தம், ஏமாற்றம், எதிர்பார்ப்பு, போராட்டம், தோல்வி, கண்ணீர் இவற்றை இதயத்தால் உணர்வதே இல்லை. இந்த உலக பார்வைக்கு அப்பாற்பட்ட மறுபக்கத்தை உணர்பவர்களே நல்ல மனிதர்களாக ஒளிர்கிறார்கள்.

நம் வாழ்வின் மறுபக்கமே நமக்கு இரக்கத்தையும், மனித நேயத்தையும் கற்றுத் தருகிறது என்பதை அறிவோம். உடன் வாழ்பவர்களின் கோபத்திற்கு பின்னாலிருக்கும் வேதனைகளையும், அமைதிக்கு பின்னாலிருக்கும் சோகங்களையும் இதயத்தால் உணர்வோம். விமர்சிப்பதை விட்டுவிட்டு, புரிந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வோம். ஒற்றையடிப் பாதையில் அவசர அவசரமாய் ஓடாமல், வாழ்வின் மறுபக்கத்தை கற்பிக்கும், நீண்ட, நெடிய அகன்ற பாதையில் பொறுமையாய் பயணிப்போம்.

**வினாக்கள்:**

1. செல்வத்தையும், வெற்றியையும் தேடி நாம் ஓடும் அன்றாட அவசர ஓட்டத்தின் இறுதியில், நாம் அடையும் பொருள், நாம் வழியில் இழந்துவிட்ட மனித உறவுகளுக்கும், அமைதிக்கும் ஈடாகுமா?
2. இயேசுவைப் போலப் பிறரின் வேதனைகளையும் கண்ணீரையும் உணர்ந்து, பொறுமையாகப் பயணிக்கும் அகன்ற பாதையைத் தேர்ந்தெடுக்க விடாமல், நம்மை அந்த ஒற்றையடிப் பாதையிலேயே ஓட வைப்பது எது?

4-ம் வாரம்

## விளம்பர அரசியல் விளையாட்டு

ஏமாறும் நவீன ஆதாம் ஏவாள்கள் நாம்...

அருள்பணி. **எட்வின் ராஜ் சி.**



**கரப்பான் பூச்சி ஜனதா கட்சி** *(CJP)* என்று ஒரு மாபெரும் மாணவர்கள் கூட்டம் இன்று ஜனநாயகத்தை மீட்டெடுப்போம் என்று பலநாள் போராடியதும், அதன் விளைவாக கல்வி அமைச்சர் தாமேந்திர பிரதான் பதவி விலகியிருப்பதும் நாடறிந்த நிகழ்வு. சமூக மாற்றம் வேண்டுமென்று எல்லா காலத்திலும், அந்தந்தக் கால கட்டத்தின் இளைஞர்கள் போராட வீதிக்கு வருவது இயல்பான ஒன்றுதான். போராட்டம்தான் அரசியல் புரட்சிக்கும் சமூக மாற்றத்திற்கும் களத்தைத் தயார் செய்கிறது. வெள்ளையர்களின் ஆதிக்கத்தை உடைத்தெறிந்து சுதந்திரக்காற்றை சுவாசிக்க இளைஞர்கள் கூட்டமொன்று களமிறங்கியது.



பலத் தியாகங்கள் சிறைவாசங்கள், அடக்குமுறைகள் மற்றும் அவமானங்கள் என்று அனைத்தையும் கடந்து சுதந்திரத்தை மீட்டெடுத்தார்கள். இன்ஸ்டாகிராம் வலைதளத்தில் தற்போது இந்தி

திணிப்பை எதிர்த்து தமிழை மீட்க புறப்படுவோம், ஒன்று கூடுவோம் என்று முழங்கி, $OG$ **தமிழர்கள்** என்ற பெயரை தாங்கி, ஒரு இளைஞர் கூட்டம் போராடத் தயாராவதைப் பார்க்க நேர்ந்தது. அது போன்றுதான், இரண்டாம் சுதந்திரப் போராய் இந்தி திணிப்பிற்கு எதிராக அன்று தமிழக மாணவர் கூட்டம் களமிறங்கி வெற்றிக் கண்டது. உலகமே வியந்து பார்த்த, 21-ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய போராட்டமாக வெடித்த **ஜல்லி கட்டு** போராட்டத்தை நாம் எளிதில் மறந்து கடந்து போக முடியாது.

ஏன் இந்த போராட்டங்கள்? அதற்கான தேவை என்ன? என்று நமக்கு சிந்திக்கத் தோன்றும். சுதந்திர இந்தியாவை ஆண்ட அரசியல் கட்சிகள் ஊழல் நிறைந்த, தரமற்ற அரசியல் சூழலை உருவாக்கி, அரசியல் என்றாலே வெறுப்போடும், அருவருப்போடும் பார்த்து, அரசியல்வாதிகள் என்றாலே நேர்மையற்ற மனிதர்கள் என்று எண்ணும் சூழ்நிலையில் கொண்டு நிறுத்தியிருக்கிறார்கள். சமூகச் சேவையாக தொடங்கிய அரசியல் பயணம் கட்டப்பஞ்சாயத்து, ரவுடிசம் என்று கேடுகெட்டுப்போய் சீரழிந்து நிற்க்கிறது. இப்படி சீரழிந்து கிடக்கும் அரசியல் சூழலில் இன்னுமொரு பெரும் சீரழிவு வந்திருக்கிறது. அதுதான் விளம்பர அரசியல்,

## விளம்பரம்: வியாபாரிகளின் ஏமாற்றுச் சதி

"**புதுசு கண்ணா புதுசு**" தொடங்கி "***நிறம்-மணம்-சுவை***" என்று "**சொக்கத்தங்கம் சொக்கவைக்கும் தங்கம்**" வரையிலான விளம்பரங்களை நாம் மறந்திருக்க முடியாது. தேவைக்குகூட எதுவும் வாங்கும் சக்தியில்லாத சூழல் இருந்த காலம்போய், தேவைக்கு பொருட்கள் வாங்கிய காலம் இருந்தது. வியாபாரிகளின் பேராசை, பெரும் பணக்காரர்களின் பணம் சம்பாதிக்கும் வெறி, போன்றவற்றின் வெளிப்பாடாக, சந்தைகளில், கடைகளில், பின்னாளில் வானொலி தொலைக்காட்சி வழி வீடுகளில் வந்து விழுந்த பேராபத்துதான் இந்த விளம்பரங்கள்.

ஆதாம் மற்றும் ஏவாளை ஏமாற்றி, "***இந்தக்கனி சிறந்தக்கனி, உங்களை கடவுளைப் போல் மாற்றும் கனி***" என்று விளம்பரப்படுத்தி சூழ்ச்சி செய்து கனியை உண்ண வைத்தது பாம்பு. மனிதனும் ஞானம் இன்றி சூழ்ச்சியில் விழுந்தான். அது போலதான் விளம்பரத்தைப் பார்த்து, உடலுக்கு ஆரோக்கியமானதைப் புறந்தள்ளி கெடுதல் தரும் உணவுகளைத் தேடித்தின்பதும், பின் உடல் நலம் குன்றிக் கிடப்பதும், தேவைக்கு அதிகமான ஆசைக்காக துணி-மணிகள், பொருட்கள், வாகனங்கள், நகை - நட்டுகள் வாங்கி பின் கடனில் வாழ்வை இழப்பதும் கண்ணெதிரே நடந்து கொண்டுதான் இருக்கிறது. விளம்பரம் செய்து தரமில்லாத, தீமையான, வாழ்வதற்கு தேவையற்ற பொருட்களை விற்று, சாதாரண மக்களின் வியர்வையில் உழைப்பில் கொழுத்து வளர்கிறார்கள் முதலாளிகள். விளம்பரத்தைப் பார்த்து ஏமாந்து சரியானதை வாங்காமல், நம்மீது, நம்மை அறியாமல் திணித்ததை வாங்கி ஏமாந்ததைக்கூட அறியாமல் ஏமாந்து நிற்க்கிறோம்.

## விளம்பர அரசியல்: வியாபாரிகள் மற்றும் அரசியல் வாதிகளின் கூட்டுச்சதி

காமராஜரிடம் ஒருமுறை நாம் செய்த நல்ல செயல்களை விளம்பரம் செய்வோம்; அப்போது மக்கள் வாக்களிப்பார்கள் என்று சொன்ன போது, "**நாம் உருவாக்கிய பள்ளியில் மக்கள் படிக்கிறார்கள், நாம் போட்ட சாலையில் நடக்கிறார்கள், கட்டிய மருத்துவமனையில் மருத்துவம் பெறுகிறார்கள், மக்களுக்கு தெரியாத எதை நாம் விளம்பரப்படுத்தப் போகிறன்றோம்? மக்களுக்கு தெரியும். பணத்தை செலவழித்து விளம்பரம் ஒன்றும் தேவையில்லை**" என்று சொன்னதாக பதியப்பட்டிருக்கிறது. அன்று அரசியல் சேவையாக, மக்கள் நலனாக இருந்தது. இன்று, அரசியல் வியாபாரிகளின் வியாபாரக் கணக்காகவும், பெரும் முதலாளிகளின் இடைத்தரகு வேலையாகவும், பல அரசியல்வாதிகளின் கொள்ளைக் கூடாரமாகவும் மாறிப்போனதால், விளம்பரம் செய்தே தேர்தலில் வாக்குகளை அறுவடை செய்து, வெற்றி பெறுகிறார்கள். தேசிய அரசியலோ, மாநில அரசியலோ விளம்பரம் மூலம் மூளை சலவை செய்யப்பட்டே அதிகாரம் வென்றெடுக்கப்படுகிறது.

## அரசியல் ஆலோசகர்கள்: ஜாக்கிரதை

பல பொருட்களை விளம்பரப்படுத்தி தரமற்ற ஆபத்தைக் கொண்டுவரும் பொருட்களை விற்பதைப்போல, அரசியல் லாப-நட்ட கணக்கிற்காக, விளம்பரம் செய்தே அரசியலை அணுகுகிறது அதிகமான அரசியல் கட்சிகள். புதிய கட்சி, பழைய கட்சி, பெரிய கட்சி, சிறிய கட்சி என்று எதுவும் இதற்கு விதிவிலக்கல்ல, ஒரு சில கட்சிகளைத் தவிர மோடியை நல்லவர் வல்லவர், குஜராத்தை சொர்க்க பூமி ஆக்கியவர், இந்தியாவை மீட்க வந்த மீட்பர் என்றெல்லாம் பொய்யுரைத்து, பெரும்பான்மை இந்தியர்களை நம்ப வைத்து வெற்றி பெற செய்தது அரசியல் தரகு விளம்பரம் செய்யும், அரசியல் ஆலோசனை நிறுவனம் (Political Consulting Brand) I-PAC. இவர்கள் தான் கடந்த முறை தமிழகத்தில் வெற்றி பெற்ற கட்சிக்கும், இந்த முறை வெற்றிப்பெற்று அரியணை ஏறியிருக்கும் கட்சிக்கும் வேலை செய்திருக்கிறார்கள். அதோடு J-PAC, The Roots மற்றும் Voice of Common போன்ற நிறுவனங்களும் இணைந்து விளம்பரம் செய்தும். பொய் செய்திகள் பரப்பியும், மற்ற அரசியல் தலைவர்கள் மற்றும் மாற்றுக்கட்சிகள் மீது அவதூறுகள் வாரி இறைத்தும், தாங்கள் சார்ந்திருக்கும் கட்சியை, அரசியல் தலைவரை வெற்றி பெற வைத்திருக்கிறார்கள். 300 முதல் ஐந்நூறு, ஆயிரம் கோடிகளை இந்த அரசியல் கட்சிகள் இந்த நிறுவனங்களுக்கு வாரி இறைக்கிறார்கள்.

பணத்தை வாரி இறைத்து விளம்பரம் செய்யும் முதலாளி எப்படி லாபத்தை மட்டுமே முன்னிறுத்துவானோ, அதுபோலதான் கோடிகளை வாரி இறைத்து விளம்பர அரசியல் செய்யும் அரசியல்வாதிகளும் அந்தக்

கட்சிகளும் லாபத்தை மட்டும் தானே மனதில் கொள்வார்கள்? அப்போது எப்படி தூய ஆட்சி வரும்? விளம்பரத்தை நம்பி பொருள் வாங்குவதில் வியாபாரிகளும், ஓட்டு போடுவதில் அரசியல்வாதிகளும், இல்லை... அரசியல்வியாபாரிகளும் வாழ்கிறார்கள். அரசியல் விளம்பரத்தால் வீழ்பவர்கள், நம்மைப் போன்ற சாதாரண மக்களும், ஜனநாயகமுமே.

**அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா... கூவுவோம்... ஏமாறுவோம்..**

---

# இளையோர் பக்கம்

வெற்றி



## சிரமங்கள் சாதனையின் ஆசிரியர்கள்




வெற்றி
உனதே

# உறவுக்கு ஏங்கும் மனம்

ஆசிரியர். **சேவியர்**

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உறவின் உன்னதங்கள் மறைந்து போனதால் தனிக்குடுத்தனங்கள், முதியோர் இல்லங்கள், அனாதை ஆசிரமங்கள் ஏராளமாக தோன்றி வருகின்றன.

உறவிற்கு அடிப்படை அன்பு ஒன்றே. உறவுகளின் இணைப்பே குடும்பம்.

உறவு என்ற ஒற்றைப்புள்ளியிலிருந்து தான் உலகம் உருவாகிறது. உறவுகளின் தொகுப்பாய் உருவெடுத்தது தான் குடும்பம். தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, சித்தி, சித்தப்பா, மாமா, அத்தை என ஆலமர விழுதுகளை பரப்பிய குடும்பங்கள் இன்று உறவுகளை தவிர்த்து ஒற்றை பனமரமாய் ஒதுங்கி நிற்கிறது.



உனக்காக எதையும் இழப்பேன் என்று சொல்லும் உறவை விட, நீ எதை இழந்தாலும் உன்னுடன் நான் இருப்பேன் என சொல்லும் உறவே சிறந்த வரம்.

இவ்வுலகம், பணம் இல்லாதவனை "*அனாதை*" என சொல்வதில்லை. ஆனால் உறவுகள் இல்லாத ஒருவன், கோடி கோடிகள் வைத்திருந்தாலும் அவன் "*அனாதையே*". விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை நம்மிடம் எப்போது மறைந்து போகிறதோ, உறவுகள் சிதைந்து விரிசல் ஏற்படுவது நிச்சயமே.

கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து போவதற்கு காரணம் உறவுகள் சிறப்பாக அமையாததே.

அன்பியங்கள், அன்பிய ஒருங்கிணையங்கள் தொய்வு ஏற்பட காரணம் உறவுகளின் தொடர்ச்சியற்ற நிலையே முன்பெல்லாம் சிறுகுடிசை வீடுகளில் மனிதர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், உறவோடும் வாழ்ந்தோம். ஆனால் தற்போது பெரிய வீடுகளில் குறைவான நபர்களோடு உறவினின்றி தெரியாத முகங்களோடு "**நண்பர்கள்**" என்ற குழுவோடு பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அன்பினால்

கட்டப்பட்ட பந்தங்கள் ஒருபோதும் பிரிவதில்லை. காணும் உறவுகளோடு அன்பை பரிமாறலாமே.

பறவைகள், விலங்குகள், செடிக்கொடிகள் கூட்டமாக அன்பழக வாழும்போது, ஆறறிவு உள்ள மனிதர்களோ உயிரற்ற எந்திரங்களுடன் இதுவல்லவோ வாழ்க்கை என்றல்லவோ பயணிக்கிறோம்.

- உறவோடு வாழ்ந்து பாருங்கள் எவற்றையும் எதிர்த்து நிற்கலாம் என்ற மனதைரியம் பிறக்கும்.
- உறவோடு வாழ்ந்து பாருங்கள் ஆரோக்கியம் தன்வசப்படும்.
- உறவோடு வாழ்ந்து பாருங்கள் உங்கள் குடும்பம் திருக்குடும்பமே.

படங்களிலும், நிழற்படங்களிலும் பார்க்கக்கூடிய உறவுகள் நிறைந்த கூட்டுக்குடும்பங்கள் நிஜவாழ்க்கையில் மலரும் நாள் எந்நாளோ... மலரும்... மலர வேண்டும்...

## சிந்தனைக்கு

1. உறவுகள் மேம்பட நம் அன்பியங்களில் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும்?
2. நம் குடும்பங்களில் உள்ள முதியோர்களிடம் உறவுகளை எங்கனம் பரிமாறிக் கொள்கிறார்கள்?

## அறிவிப்பு

***அன்பானவர்களே!***

நமது குழித்துறை மறைமாவட்ட அன்பியப் பணிக்குழு சார்பாக கருத்தரங்கு 13.6.2026, சனிக்கிழமை, தொலையாவட்டம் அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் வைத்து **அசிசியார் வாழ்கிறார்** என்ற மையசிந்தனையில் நடைபெற்றது. இது மூன்று அமர்வுகளாக நடைபெற்றது. மூன்று அமர்வுகளையும், ஒரு அமர்வு 1 1/2 பக்கம் வீதம் ஐந்து பக்கத்திற்கு மிகாமல் கட்டுரையாக எழுதி, அன்பியப் பணிக்குழு அலுவலகம், உண்ணாமலைக்கடையில் ஒப்படைக்க கேட்டுக் கொள்கிறோம். சிறந்த படைப்புகளுக்கு **பரிசும்,** கலந்து கொள்பவர்களுக்கு சிறப்பு பரிசும் வழங்கப்படும்.

**ஒப்படைக்கப்பட வேண்டிய கடைசி நாள் 18.8.2026.**

சிறார் பக்கம்

# நாட்டின் கண்கள் குழந்தைகள்

திருமதி. **ஜோஸ்பின் விப்சி**

**"குழந்தைகள் நாட்டின் கண்கள்**
**அவர்களின் புன்னகை நாட்டின் எதிர்காலம்"**

குழந்தைகள் வீட்டின் மகிழ்ச்சி. பள்ளியின் பெருமை நாட்டின் எதிர்காலம். குழந்தைகள் இல்லாத வீடு அமைதியாக இருக்கலாம் ஆனால் சிரிப்பு இருக்காது.



சின்ன குழந்தைகளிடம் பெரியவனாகி என்ன ஆகப்போகிறாய் என்று கேட்டால், "**முதலில் பெரியவனாகட்டும்... அப்புறம் யோசிக்கிறேன்!**" என்றுச் சொல்லி விடுவார்கள்.

ஒரு குழந்தையிடம், "**உன் அம்மா யார்?**" என்று கேட்டால் "**என்னை தினமும் திட்டறவங்க!**" என் அம்மா என்று சொன்னதாம். ஆனால் அடுத்த நொடியே, அம்மாவையே கட்டிப்பிடித்துக் கொள்கிறது, அது தான் குழந்தை மனம்.

சிறு வயதில் குழந்தைக்கு அன்பு, ஒழுக்கம், மனிதநேயம், கல்வி மற்றும் நல்ல பண்புகளை கற்றுக் கொடுத்தால் அவர்கள் நாளை சிறந்த மருத்துவர், ஆசிரியர், விஞ்ஞானி, நீதிபதி, விவசாயி மற்றும் பொறுப்புள்ள தலைவர்களாக உருவெடுப்பார்கள். குழந்தைகளின் கேள்விக்கு பொறுமையாக பதில் அளிப்போம். அவர்களின் திறன்களை ஊக்குவிப்போம். விளையாடவும், கற்கவும், சிந்திக்கவும், சுதந்திரம் அளிப்போம். குழந்தைகளைப் பாதுகாப்போம். அவர்களின் கனவுகளை வளர்ப்போம். நாட்டின் எதிர்காலத்தை ஒளிரச் செய்வோம்.

***நாட்டின் கண்கள் குழந்தைகள்***
***நாளை நம்பிக்கை விதைகள்***
***புன்னகை பூக்கும் முகங்களில்***
***புதிய உலகின் விடியல்கள்...***

***பிஞ்சு கரங்கள் சிறியதென்றாலும்***
***பெரிய கனவுகள் அதில் மலரும்***
***அன்பும் பண்பும் விதைத்திட்டால்***
***அறிவின் மரங்கள் உயர்ந்து வளரும்...***

# பாட்டி வைத்தியம்



திரு. **ஜஸ்டின்**

***வணக்கம்!***

***அன்பான அன்பிய உறவுகளே!***

பாட்டி வைத்தியம் (கை வைத்தியம்) என்பது நம் முன்னோர்கள், குறிப்பாக நமது பாட்டிமார்கள், சமையலறையில் உள்ள பொருட்களைக் கொண்டு உடலுக்கு ஏற்படும் சிறு சிறு உபாதைகளை குணப்படுத்தப் பயன்படுத்திய பாரம்பரிய மருத்துவ முறையாகும். இது எந்தவித பக்க விளைவுகளும் இல்லாத, இயற்கையான மற்றும் செலவில்லாத மருத்துவமாகும்.



ஆங்கில மருத்துவ முறைகள் வருவதற்கு முன்பாக, நம் மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாத்தது பாட்டி வைத்தியமே. இம்முறை சித்த மருத்துவத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. சமையலில் பயன்படுத்தப்படும் மிளகு, சீரகம், மஞ்சள், இஞ்சி, பூண்டு, தேன் மற்றும் துளசி போன்ற மூலிகைகள் அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டவை.

## எளிய பாட்டி வைத்திய முறைகள்:

சளி, இருமலால் அவதிப்படுகிறீர்களா? நான் பாட்டி சொல்றேன் கேளுங்க, தேனுடன் சிறிதளவு இஞ்சி சாறு அல்லது தூய மஞ்சள் தூள் கலந்து சாப்பிட்டால் தொண்டை வலி மற்றும் சளி குணமாகும். முக்கியமா இந்த தேன் சூடு மட்டும் பண்ணக் கூடாது. தேன் சூடானால் உடல் நலத்திற்கு கேடு செய்யும்.

என்னம்மா தலைவலியா இருக்கா கவலைபடாதே பாட்டி சொல்றேன் கேளு கண்ணு, கற்பூரவல்லி (நவர பச்சலை) இலைச் சாறுடன் சிறிதளவு நல்லெண்ணெய் கலந்து மிதமாகச் சூடு செய்து நெற்றியில் பற்றுப் போட்டால் தலைவலி குறையும்.

ஏண்டா பேராண்டி வாய்ப்புண்ணா இருக்கா, மோரில் சிறிதளவு உப்பு அல்லது நல்லெண்ணெய் சேர்த்து ஐந்து நிமிடம் வாயில் வைத்து கொப்பளித்தால் வாய்ப்புண் சரியாகும்.

பல்வலி இருக்கே பொழுது சாஞ்சாதான் நம்மள பாடா படுத்தும், பாட்டி சொல்றேன் கேளு, கிராம்பை இடித்து பொடி செய்து பல்லில் வலி உள்ள இடத்தில் தடவினால் வலி குறையும்.

நட்சத்திர சோம்பு அல்லது சோம்பு (பெ.ஜீரகம்) வாயில போட்டு மென்று சாறை உட்கொள்ளுங்கள் செரிமானத்தை மேம்படுத்தவும், நெஞ்செரிச்சலை சரிபடுத்தவும், சளி மற்றும் இருமலைக் குறைக்கவும் உதவுகிறது.

# திருச்சபை சட்டம்

## கத்தோலிக்கர், கத்தோலிக்கர் அல்லாத ஒருவரை திருமணம் செய்து கொள்ளலாமா?



அருள்முனைவர். **ஆரோக்கிய ஜோஸ்** DCL

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கிறிஸ்தவர்களுக்கிடையிலான உறவைப் புதிய ஒற்றுமை உணர்வில் அணுகியது. குறிப்பாக *Unitatis redintegratio* என்ற ஏடு, கத்தோலிக்கர் அல்லாத பிற கிறிஸ்தவர்களிடத்தில் இருக்கும் அருளின் கூறுகளையும், கிறிஸ்துவில் உள்ள உண்மையான சகோதரத்துவத்தையும் ஏற்றுக்கொண்டு, உரையாடல் மற்றும் பரஸ்பர மரியாதையை வளர்க்க அழைக்கிறது. இதனால், *mixed marriage* குறித்து திருஅவை கடுமையான மறுப்பிலிருந்து, மேய்ப்புப் பார்வையுடன் கூடிய கவனமான அணுகுமுறைக்கு நகர்ந்தது என்று சொல்லலாம்.



அதே நேரத்தில் திருச்சங்கம், சமய வேறுபாடுகள் குடும்ப வாழ்வில் சிரமங்களை ஏற்படுத்தலாம் என்பதையும் மறுக்கவில்லை. அதனால், ஒற்றுமை பற்றிய ஏகமனப்பான்மை வளர்த்தாலும், விசுவாசத்தில் அலட்சியம் காணப்படக் கூடாது என்று திருஅவை தொடர்ந்து எச்சரிக்கிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிந்தைய *Matrimonia mixta* என்ற ஆவணம் இதைச் சட்டரீதியாகவும் மேய்ப்புரீதியாகவும் தெளிவுபடுத்தியது.

இன்றைய கத்தோலிக்கத் திருஅவை *mixed marriage*-ஐ ஒரு சாத்தியமான திருமண நிலையாக ஏற்றுக்கொள்கிறது; ஆனால் அது தம்பதியருக்கு கூடுதல் ஆயத்தத்தையும் ஆன்மீக முதிர்ச்சியையும் கோருகிறது. காரணம், திருமணத்துக்குப் பின் வழிபாடு, பிள்ளைகளின் மதக் கல்வி, குடும்பத் திருநாள்கள், மற்றும் திருச்சபைத் தொடர்பு போன்ற துறைகளில் கருத்து வேறுபாடுகள் உருவாகலாம். எனவே, இத்தகைய திருமணத்திற்கு முன் போதனை, ஆலோசனை, மற்றும் மேய்ப்புப் பயிற்சி மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது.

இன்றைய கற்றுத்தரலில் முக்கியமான சமநிலை இதுவாகும். மற்றவரின் மனச்சாட்சியையும் சமயச் சுதந்திரத்தையும் மதிக்க வேண்டும்; அதேவேளையில் கத்தோலிக்கப் பக்கம் தனது விசுவாசக் கடமையை மறந்துவிடக் கூடாது. அன்பு, உரையாடல், பரஸ்பர மரியாதை ஆகியவை குடும்ப ஒற்றுமையை வளர்க்கும்; உண்மை, விசுவாசம், திருச்சபை ஒழுங்கு ஆகியவை கத்தோலிக்க அடையாளத்தை பாதுகாக்கும்.

ஆக, கத்தோலிக்கர், கத்தோலிக்கர் அல்லாத பிற சபையினரைத் திருமணம் செய்து கொள்ளலாம்; ஆனால் அது சாதாரண விருப்ப முடிவாக அல்ல, திருஅவையின் சட்டமும் போதனையும் வழிநடத்தும் பொறுப்பான முடிவாக இருக்க வேண்டும். ***mixed marriage*** என்றால் அனுமதி தேவை; திருமுழுக்கற்றவருடன் திருமணம் என்றால் ***dispensation*** தேவை; கத்தோலிக்கப் பக்கம் விசுவாசப் பாதுகாப்பு மற்றும் பிள்ளைகளின் கத்தோலிக்க வளர்ப்பு குறித்து உறுதிமொழி அளிக்க வேண்டும். எனவே, இப்படிப்பட்ட திருமணத்தை விரும்புகிறவர்கள் முதலில் தங்கள் பங்கு அருட்பணியாளரை அணுகி, திருஅவைச் சட்டப்படி தேவையான ஆவணங்கள், போதனை, அனுமதி, மற்றும் ஆயத்தம் ஆகியவற்றை நிறைவேற்றுவது திரு அவையின் ஞானமான வழி ஆகும்.

# நில உரிமையை

## உறுதி செய்யும் துணை ஆவணங்கள்

அருள்முனைவர். **ஆரோக்கிய ஷெல்லி றோஸ்** DCL



முன்பு நாம் சிறுவர்களாக இருந்த நாட்களில் பள்ளிக்கூடங்களில் சிறப்பு பயிற்சியாக, வங்கியின் அலுவல்களை எப்படி கையாள்வது, தபால் நிலையத்தில் நம்முடைய அலுவல்களை எப்படி கையாள்வது, பேருந்திலும், தொடர்வண்டியிலும் இருக்கையை எப்படி முன்பதிவு செய்வது, இன்னும் பல அடிப்படையான நடைமுறை தேவைகளைப் பற்றி படித்திருந்தோம். அன்று இவை அனைத்தும் நம்முடைய அன்றாட தேவைகள் அல்ல. அது நம்முடைய சிறப்பு தேவையாக இருந்தது. எனவே பள்ளிக்கூடங்களில் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.



அந்த நாட்களில் நீதிமன்ற அலுவல்களை எப்படி செய்வது என்று நாம் படிக்கவில்லை, காரணம் அது மனிதனுடைய அன்றாட தேவையாகவும் இல்லை. சராசரி மனிதனுடைய சிறப்பு தேவையாகவும் இல்லை. அந்தக் காலம் இன்று மாறிவிட்டது. சாதாரண மனிதனின் சிறப்பு செயல்பாடுகள் பட்டியலில் நீதிமன்ற அலுவலகம் வந்து விட்டது. பேருந்தில் இருக்கையை முன் பதிவு செய்வது போல, நீதிமன்ற செயல்பாடும் அனுதின நிகழ்வாக மாறக்கூடாது என்கின்ற விருப்பத்தோடு ஒரு சாதாரண மனிதனுக்கு தேவையான நீதிமன்ற நடைமுறைகளை பற்றியும், அலுவல்களைப் பற்றியும் நாம் வருகின்ற இதழ்களில் சிந்திப்போம்...

தொடரும்...

# அறிவிப்பு

கலைவிழா
சிறப்பு
போட்டி

## அன்பிய பணிக் குழு நடத்தும்
## சுற்றுச்சூழல் பாதுகாப்பில் என் குடும்பம்
## *Eco Family Challenges*

### I. விதிமுறை

1. ஒரு குடும்பம் ஒரு குழுவாக கருதப்படும் (ஒரு குடும்பத்தில் மூன்று நபர்கள்).
2. கால அளவு இரண்டு மாதம் (ஆகஸ்ட், செப்டம்பர்)
3. சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

   அறிக்கை, புகைப்படம், காணொளி, குறுகிய விளக்கம்
4. ஆகஸ்ட் முதல், செப்டம்பர் (29.09.2026, செவ்வாய்கிழமை) கடைசி வரை புகைப்படம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (Before, After)
5. நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

### II. குறிப்பு

இயற்கையைப் பாதுகாக்க ஒரு குடும்பம் என்னென்ன செயல்களைச் செய்யலாம்.

### III. உதாரணம்

மரம் நடுதல், கழிவுப்பொருட்களை பயனுள்ளதாக மாற்றுதல், மூலிகைத்தோட்டம், மாடித்தோட்டம், பூந்தோட்டம், மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல். இன்னும் பல...

### IV.

| மதிப்பீட்டு விவரம் | மதிப்பெண் |
|---|---|
| சுற்றுச்சூழல் தாக்கம் | 25 |
| படைப்பாற்றல் | 25 |
| குடும்பமாக பங்கேற்பு | 20 |
| நடைமுறை பயன்பாடு | 20 |
| வெளிக்கொணர்தல் | 10 |
| | ---- |
| மொத்தம் | 100 |
| | ---- |



**அன்பியப் பணிக்குழு**
குழித்துறை மறைமாவட்டம்

## அழகான வரிகள்

1. அறிமுகம் இல்லாதவர்களின் பார்வையில், நாம் எல்லோரும் சாதாரண மனிதர்கள்...
2. பொறாமைக்காரரின் பார்வையில், நாம் அனைவரும் அகந்தையாளர்கள்...



3. புரிந்து கொண்டோரின் பார்வையில், நாம் அற்புதமானவர்கள்...
4. நேசிப்போரின் பார்வையில், நாம் தனிச்சிறப்பானவர்கள்...
5. காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களின் பார்வையில் நாம் கெட்டவர்கள்...
6. எம்மைப் பற்றி ஒவ்வொருவருக்கும் ஒரு தனியான பார்வை உண்டு...
7. ஆதலால் பிறரிடம் உங்கள் பிம்பத்தை அழகாக்கிக்காட்ட சிரமப்படாதீர்கள்...



8. இறைவனின் திருப்தியே உங்களுக்குப் போதுமானது...
9. மனிதர்களை திருப்திப்படுத்துதல் என்பது எட்ட முடியாத இலக்கு...
10. இறைவனை திருப்திப்படுத்துதல் என்பது அடையக் கூடிய இலக்கு...
11. எட்ட முடியாததை விட்டு விடுங்கள், அடைய வேண்டியதை விட்டு விடாதீர்கள்...

## கற்றுக் கொள்வோம்

கொக்கை பார்த்து பொறாமையை கற்றுக் கொள்வோம். எறும்பை பார்த்து சுறுசுறுப்பை கற்றுக் கொள்வோம். தேனியை பார்த்து உழைப்பை கற்றுக் கொள்வோம். காகத்தை பார்த்து பகிர்ந்துண்ணக் கற்றுக் கொள்வோம். நாயை பார்த்து நன்றியை கற்றுக் கொள்வோம்.

# நலத்திட்டங்கள்

## முளகுமூடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவித் தொகை |
|---|---|---|---|---|
| முளகுமூடு | பெர்னதெத் அன்பியம் | நல உதவி | 1 | 1,000/- |
| | கார்மெல் அன்பியம் | கல்வி உதவி | 3 | 3,000/- |
| | குழந்தை இயேசு அன்பியம் | நல உதவி | 1 | 35,000/- |
| அப்பட்டுவிளை | அன்பியங்கள் | மருத்துவ உதவி | 1 | 34,620/- |
| ஈத்தவிளை | அன்பிய ஒருங்கிணையம் | நல உதவி | | 30,435/- |
| கல்லறவிளை | அன்பிய ஒருங்கிணையம் | நல உதவி | | 5,000/- |
| கூட்டமாவு | அன்பிய ஒருங்கிணையம் | நல உதவி | | 34,377/- |
| செம்பருத்திவிளை | புனித செபஸ்தியார் அன்பியம் | நல உதவி | 1 | 500/- |
| | புனித யாக்கோபு அன்பியம் | நல உதவி<br>கல்வி உதவி | 2 | 2,000/- |
| குழிவிளை | தூய பேதுரு அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 14,000/- |

## வேங்கோடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவித் தொகை |
|---|---|---|---|---|
| வளனூர் | புனித அல்போன்சாள் | மருத்துவ உதவி | 1 | 7,000/- |
| காஞ்சாம்புறம் | புனித அந்தோணியார் | நல உதவி | 1 | 8,000/- |
| வாறுவிளை | அன்பிய ஒருங்கிணையம் | நல உதவி | 10 | 1,500/- |
| வேப்புவிளை | புனித ஜார்ஜியார் | நல உதவி | 1 | 1,000/- |
| வெள்ளையம்பலம் | அன்பிய ஒருங்கிணையம் | காப்பகம் | | 25,000/- |
| செபஸ்தியார்புரம் | அன்பிய ஒருங்கிணையம் | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| அம்சி | அன்பிய ஒருங்கிணையம் | மருத்துவ உதவி | 1 | 25,000/- |
| இலவுவிளை | புனித ஞானபிரகாசியர் | மருத்துவ உதவி | 1 | 3,200/- |
| | புனித ஆரோக்கிய மாதா | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | புனித லூர்து அன்னை | மருத்துவ உதவி | 1 | 1,500/- |
| | அன்பிய ஒருங்கிணையம் | காப்பகம் | | 20,000/- |

## திரித்துவபுரம் மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவித் தொகை |
|---|---|---|---|---|
| பாகோடு | 2-ம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 7,000/- |
| | 5-ம் அன்பியம் | திருமண உதவி | 1 | 3,400/- |
| | 12-ம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 9,500/- |
| காஞ்சிரகோடு | பாத்திமா மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 9,500/- |
| | | கல்வி உதவி | 2 | 9,500/- |
| சிராயன்குழி | யோவான் அன்பியம் | காப்பகம் | 1 | 3,800/- |
| | | கல்வி உதவி | 1 | 1,000/- |
| மார்த்தாண்டம் | அன்பிய ஒருங்கிணையம் | கல்வி உதவி | 4 | 6,500/- |
| சூழால் | 1-ம் அன்பியம் | நல உதவி | 1 | 500/- |
| | 8-ம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| | 12-ம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,500/- |
| இருதயபுரம் | அன்பிய ஒருங்கிணையம் | நல உதவி | 2 | 4,000/- |
| திரித்துவபுரம் | அன்னை வேளாங்கண்ணி அன்பியம் | கல்வி உதவி | 1 | 6,000/- |
| வெட்டுவெந்தி | அன்பிய ஒருங்கிணையம் | மருத்துவ உதவி | 1 | 80,000/- |
| மேல்புறம் | 2-ம் அன்பியம் | காப்பகம் | 1 | 12,000/- |
| | 6-ம் அன்பியம் | நல உதவி | 1 | 1,200/- |
| | 8-ம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 7,800/- |
| மருதங்கோடு | அன்பிய ஒருங்கிணையம் | மருத்துவ உதவி | 1 | 500/- |
| கிறிஸ்துராஜபுரம் | சவேரியார் அன்பியம் | கல்வி உதவி | 1 | 750/- |

## மாத்திரவிளை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவித் தொகை |
|---|---|---|---|---|
| மாத்திரவிளை | தூய வளனார் அன்பியம் | காப்பகம் | | 27,000/- |
| | புனித ஆக்னஸ் | காப்பகம் | | 2,000/- |
| | | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| | மிக்கேல் அதிதூதர் | மருத்துவ உதவி | 2 | 6,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| மாத்திரவிளை | புனித அந்தோணியார் | மருத்துவ உதவி | 1 | 6,000/- |
| | அமல அன்னை | நல உதவி | 1 | 4,000/- |
| | தேவமாதா | நல உதவி | 1 | 13,000/- |
| | புனித குழந்தை தெரசா | நல உதவி | 1 | 1,500/- |
| | புனித யூதா ததேயு | நல உதவி | 1 | 1,500/- |
| | புனித அருளானந்தர் | நல உதவி | 1 | 2,000/- |
| | புனித அருளப்பர் | நல உதவி<br>மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| | புனித தோமையார் | மருத்துவ உதவி | 1 | 3,150/- |
| | புனித லூர்து அன்னை | மருத்துவ உதவி | 1 | 2,400/- |
| | புனித ஞானப்பிரகாசியர் | மருத்துவ உதவி | 1 | 4,000/- |
| | | நல உதவி | 1 | 13,500/- |
| பூட்டேற்றி | புனித அந்தோணியர் | நல உதவி | 1 | 2,000/- |
| | புனித சவேரியார் | நல உதவி | 1 | 1,500/- |
| | குழந்தை இயேசு | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | அன்னை தெரசாள் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| முள்ளங்கனா விளை | தூய சவேரியார் அன்பியம் | நல உதவி | 1 | 5,500/- |

## காரங்காடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவித் தொகை |
|---|---|---|---|---|
| கொன்னக்குழி விளை | லூர்து மாதா அன்பியம் | நல உதவி | 1 | 1,000/- |
| வர்த்தான்விளை | 5-ம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 500/- |
| முரசங்கோடு | வேளாங்கண்ணி அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| மாங்குழி | அன்பிய ஒருங்கிணையம் | காப்பகம் | 1 | 80,000/- |
| | | கல்வி உதவி | 18 | 15,000/- |
| | 4-ம் அன்பியம் | கல்வி உதவி | | 2,000/- |
| | 7-ம் அன்பியம் | கல்வி உதவி | | 800/- |

| | | | | |
|---|---|---|---|---|
| குழிவிளை | 1-ம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 7,000/- |
| | 2-ம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 6,500/- |
| | அன்பிய ஒருங்கிணையம் | காப்பகம் | 1 | 10,000/- + 10,924/- |
| பள்ளவிளை | அன்பிய ஒருங்கிணையம் | நல உதவி | 5 | 1,500/- |
| பாளையம் அன்னைநகர் | புனித அகுஸ்தினார் அன்பியம் | நல உதவி | 1 | 500/- |
| சேவியர்புரம் | அன்பிய ஒருங்கிணையம் | நல உதவி | 3 | 4,000/- |
| | புனித ஆரோக்கிய அன்னை அன்பியம் | நல உதவி | 1 | 2,000/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | நல உதவி | 1 | 3,000/- |
| கல்லுக்கூட்டம் | புனித சிறுமலர் அன்பியம் | நல உதவி | 1 | 3,000/- |
| வர்த்தான்விளை | 2-ம் அன்பியம் | நல உதவி | 1 | 5,000/- |
| | 4-ம் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 500/- |
| கண்டன்விளை | புனித லூயிஸ் மார்டின் அன்பியம் | நல உதவி | 1 | 500/- |
| | புனித சகாய மாதா அன்பியம் | நல உதவி | | 2,500/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | நல உதவி | | 2,610/- |
| | புனித மரிய கொரற்றி அன்பியம் | நல உதவி | | 2,000/- |
| | புனித கார்மல் அன்னை அன்பியம் | நல உதவி | | 1,000/- |
| | ஆரோபண அன்னை அன்பியம் | நல உதவி | | 1,000/- |

## முளகுமூடு மறைவட்டம்

### இருதயபுரம்

தலைவர் : திருமதி. லிஜி
து.தலைவர்: திருமதி. வளர் ஜோதி
செயலர் : திருமதி. சுபைதா
து.செயலர் : செல்வன். ராகில்ஸ்
பொருளர் : திருமதி. ஜெயராணி

### இளம்பிலாவிளை

தலைவர் : திரு. ராஜேஷ்
து.தலைவர்: திரு. பிராஞ்சிஸ்
செயலர் : திருமதி. ஷினிபா
து.செயலர் : திருமதி. டோம்னிக் சேவியர்
பொருளர் : திருமதி. சுஜி

## திரித்துவபுரம் மறைவட்டம்

| பிலாவிளை | மல்மாரி |
|---|---|
| தலைவர் : திரு. குமார்<br>து.தலைவர்: திரு. தேவ ஸ்டான்லி<br>செயலர் : திருமதி. அனிதா அருள் ராணி<br>து.செயலர் : திருமதி. ஜோஸ்வின்<br>பொருளர் : திருமதி. ஹெலன் ஜாய் | தலைவர் : திரு. K. மரிய தாஸ்<br>து.தலைவர்: திரு. S. புஷ்பலீலா<br>செயலர் : திருமதி. T. சுமதி<br>து.செயலர் : திருமதி. A. கலா<br>பொருளர் : திருமதி. ஷாலினி |
| **மஞ்சாலுமூடு** | **கிராம சபை நடைபெறும் 6 முக்கிய நாட்கள்** |
| தலைவர் : திரு. மோகன்<br>து.தலைவர்: திரு. ஆன்றனி<br>செயலர் : திருமதி. ஷீஜா<br>து.செயலர் : திருமதி. தீப்தி<br>பொருளர் : திருமதி. தீபா | ஜனவரி 26 - குடியரசு தினம்<br>மார்ச் 22 - உலக நீர் தினம்<br>மே 1 - உழைப்பாளர் தினம்<br>ஆகஸ்ட் 15 - சுதந்திர தினம்<br>அக்டோபர் 2 - காந்தி ஜெயந்தி / தேசிய நல்லிணக்க நாள்<br>நவம்பர் 1 - உள்ளாட்சி தினம் |

**கிராம சபையில் பங்கேற்போம் – நமது கிராமத்தை மேம்படுத்துவோம்**

**அன்பியப் பணிக்குழு**

**YouTube** : **https://www.youtube.com/channel UCEID2zYUEd7Bmy_MeyNM0g**
**Website** : **bcckuzhithurai.com**
**E-mail ID** : **bcckuzhithurai@gamil.com**
**Office No.** : **7358947467**

# ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 02.08.2026 | எசா. 55: 1-3 | உரோ. 8: 35, 37-39 | மத். 14: 13-21 |
| 2 | 09.08.2026 | 1 அர. 19: 9, 11-13 | உரோ. 9: 1-5 | மத். 14: 22-33 |
| 3 | 16.08.2026 | எசா. 56: 1, 6-7 | உரோ. 11: 13-15, 29-32 | மத். 15: 21-28 |
| 4 | 23.08.2026 | எசா. 22: 19-23 | உரோ. 11: 33-36 | மத். 16: 13-20 |
| 5 | 30.08.2026 | எரே. 20: 7-9 | உரோ. 12: 1-2 | மத். 16: 21-27 |

அடித்தளம் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்புக்கு.... 9487110298, 7358947467

அன்பியப்பணிக்குழு இயக்குநர்
அன்பியப் பணிக்குழு, டிரினிட்டி மேய்ப்புப்பணி மையம்,
உண்ணாமலைக்கடை - 629 179

## மறைமாவட்ட செயற்குழு கூட்டம்





## மறைவட்ட செயற்குழு கூட்டம்



முளகுமூடு



முளகுமூடு மறைவட்ட
நிர்வாகிகள் கூட்டம்



திரித்துவபுரம்



காரங்காடு

# மறைமாவட்ட அன்பிய பணிக்குழுவின் கருத்தாளர் பயிற்சி – II








